# நண்பன்'



# மெயில் எக்ஸ்பிரஸ்:

சி. விஜயாம்பாள், கிருஷ்ணகிரி.

▲ கடலில் திடீரென்று உருவாகும் புயல், மழை, அலைகளின் ஆக்ரோஷம் போன்றவைகளினால் படகு கவிழ்ந்து மீனவர்களின் உயிருக்கே ஆபத்தாக முடியும். போதாக்குறைக்கு இலங்கை ராணுவத்தினரின் அட்டூழியங்கள் வேறு! இத்தனை இன்னல்களுக்கிடையே மீன்பிடித்து வருபவனிடம், 'அரசு ஒரு ரூபாய்க்கு உனக்கு அரிசி தருகிறதே, உன்னால் ஒரு ரூபாய்க்கு மீன் தர முடியுமா?' என்று அமைச்சர் ஒருவர் கேட்கிறார் என்றால் அதை என்னவென்று சொல்வது?

பி. சந்திரா, போளூர்.

▲ கரூர் சின்னசாமியின் பேட்டி படித்தேன். 'அ.தி.மு.க.வில் சசியின் விசுவாசியாக இருந்தால்தான் நீடிக்க முடியும்' என்பது எம்.ஜி.ஆரின் விசுவாசிகளுக்கு ஏற்றுக் கொள்ள முடியாதது. அ.தி.மு.க.வை நிறுவி வளர்த்தது எம்.ஜி.ஆர்தான். அந்த எம்.ஜி.ஆரின் 'ரத்தத்தின் ரத்தங்களே' தாங்கள் வளர்த்த இந்த மாபெரும் இயக்கம் ஒரு குடும்பத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதைப் பார்த்து செய்வதறியாது திகைத்துதான் நிற்கின்றனர்.

பி.தர்ஷினி, பாபநாசம்.

▲ முன்னாள் அமைச்சர் கரூர் சின்னசாமி 12 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களை அ.தி.மு.க.விலிருந்து அழைத்து வந்து தி.மு.க.வில் இணைந்து, 'தான் சின்னசாமி அல்ல... என்றுமே பெரியசாமி' என்று நிருபித்துவிட்டார்.

நித்திலா செல்வராஜ், கோவை.

▲ கோரிக்கைகள் நியாயமானதாக இருக்குமளவுக்கு, அதை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளும் முறையானதாக இருக்க வேண்டும். 'உயர்நீதிமன்றத்தில் தமிழ்' என்ற உன்னதமான இலக்கினை ஒதுக்கிவிட்டு, அழகிரியைப் பதவியை விட்டு அனுப்பும் சதிநோக்கோடு, வழக்கறிஞர்கள் செயல்படுதல் அழகல்ல!

எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

▲ ஏ.டி.எம். தொடர் பெயருக்கேற்றாற் போல வித்தியாசமாகவும், விறுவிறுப்பாகவும் உள்ளது. அதே போல தொடருக்குப் பொருத்தமாக வெளியாகும் ஓவியங்கள், மனதிற்குச் சுறுசுறுப்பைத் தந்து அசத்துகின்றன.

ப. கோபி பச்சமுத்து, கட்டிகானப்பள்ளி.

▲ உதவி இயக்குநர்களுக்கு தலா அரை கிரௌண்ட் நிலம், மொத்த யூனிட்டுக்கும் செல்ஃபோன் இலவசம்... பரவாயில்லையே! அடிமட்டத்தில் உழைக்கும் உழைப்பாளிகளைத் தட்டிக் கொடுக்கும் விதமான 'கொடுக்கும் மனது' கோலிவுட்டில் உள்ள பெரிய மனதுகளுக்கு வந்திருப்பது உள்ளபடியே நிச்சயம் பாராட்டப்பட வேண்டியதே!

அ. லியாக்கத் அலி, திருச்சி.

▲ கட்சிக் கொடியைப் பார்த்து கயவர்களை நழுவவிட்ட காவல்துறை நிலையை என்ன சொல்ல? காவல்துறை அறிக்கையின்படி இல்லாமல் குற்றவாளிகள் பிடிபட்டதும் சுவாரஸ்யமானதே. தவறான நடவடிக்கையில் ஈடுபடுவோருக்கு கட்சிக் கொடி அடைக்கலம் தருவதை தி.மு.க. அனுமதிக்கலாமா?

வீ.சீ. வாசன், துடியலூர்.

▲ அரசியல் கலப்பு இல்லாமல் உலகின் மூத்த மொழியாம் அன்னைத் தமிழின் அருமை பெருமைகளை அரியணையில் ஏற்றி அகம் கனிந்த இலக்கியா நடராஜனின் 'நீ' கவிதை, நெஞ்சத்தை இனிய பொதிகைத் தென்றலாய் வருடிச் சென்றது.

எம்.எஸ்., கரூர்.

## புத்தகப் பரிசு பெறும் கடிதம்:



கடலுக்குள் செல்லும் மீனவர்கள் 'கரைக்குத் திரும்பி வந்தால்தான் வாழ்வு நிச்சயம்' எனப் போராட்ட வாழ்வை நடத்தி வரும் போது அவர்களைப் பார்த்து, 'ஒரு ரூபாய்க்கு மீன் தர முடியுமா?' என அமைச்சர் சுரேஷ்ராஜன் கேட்டது திமிரின் உச்சம். இவரென்ன அரிசியை இவரது பாக்கெட்டிலிருந்து எடுத்துத் தருகிறாரா? விலைவாசியால் நெருக்கடிக்கு ஆளாகும் நிலையிலா சுரேஷ்ராஜனின் வாழ்க்கைத் தரம் உள்ளது?

கே. வெங்கடேஷ்,
கும்பகோணம்.